## ஆஸ்கருக்குச் செல்லும் இந்தியப் படமும் தமிழ்நாடும்...



ஆஸ்கர் விருதுக்கு இந்தியாவின் சார்பில், பரிந்துரைக்கப்பட்டுள்ள படம் 'லாபதா லேடீஸ்'. 'கொட்டுக்காளி', 'வாழை', 'தங்கலான்' போன்ற தமிழ்ப்படங்கள் உள்ளிட்ட இந்தியா முழுவதும் பரிந்துரைக் கப்பட்ட 29 படங்களில் இருந்து பரிந்துரைக்காகத் தேர்வாகியுள்ளது 'லாபதா லேடீஸ்'.

உத்தரப்பிரதேசம் மாதிரியான ஒரு கற்பனை மாநிலத்தில் கற்பனை கிராமத்தில் நடைபெறும் கதையே லாபதா லேடீஸ். பெண்கள் முகத்தை மூடியபடி திருமணம் நடப்பதுதான் அங்கு வழக்கம். அப்படி ஒரு கணவன் ரயிலில் தன் மனைவியை அழைத்து வரும்போது, மனைவிக்குப் பதிலாக முக்காடிட்ட இன்னொரு பெண் வந்துவிடுகிறார். அவர் ஏன் வந்தார், அந்த மனைவி என்ன ஆனார், அதன்பிறகு என்ன நடந்தது என்பதுதான் கதை.

நிலப்பிரபுத்துவத்தில் இருந்து இன்னும் மீளாத. வட இந்தியக் கிராமங்களில் பெண்கள் எவ்வளவு மோசமாக அடிமைப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள் என்பதை, பகடியுடன் சொல்லும் படமிது. இந்தப் படத்தைப் பார்க்கும்போது திராவிட இயக்கத்தால் தமிழ்நாடு எந்தளவுக்கு முன்னேறியுள்ளது என்பதையும் உணரலாம்.

## ஃப்ளாஷ்பேக்



முனைவர் மா.கண்ணதாசன்



### கணையாழி அணிவித்த கலைஞர்!

1988-ஆம் ஆண்டு ஒன்றுபட்ட திருச்சி மாவட்டம், கரூரில் தி.மு.க தேர்தல் நிதி வழங்கும் கூட்டம் நடைபெற்றது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், வருகை தந்து இந்நிகழ்வில் பங்கேற்று உரை யாற்றினார்.அதிக நிதி வசூல் செய்தவர்களுக்குக் கணையாழி அணிவித்துப் பாராட்டினார், அந்நிகழ்ச்சியில், எனக்கும் கணையாழி அணிவித்தார்கள். இக்கூட்டத்தில் திருச்சி மாவட்டக் கழக முன்னோடி அன்பில் தர்மலிங்கம், அன்றைய மாவட்டச் செயலாளர் செல்வராஜ், கரூர் கே.சி.பி. ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

– முனைவர் மா.கண்ணதாசன்,
வழக்கறிஞர், கரூர்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம்!

1949-ஆம் ஆண்டு, தி.மு.கழகம் அறிவிப்புக்குப் பின்னர், 3 மாதங்களுக்குள் ஒரு பொதுக்குழு கூடியதாகத் தெரிகிறது. அது குறித்த பதிவுகள் எதுவும் இல்லை. ஆனால், 1951-ஆம் ஆண்டு மார்ச் 11-ஆம் தேதி நடைபெற்ற பொதுக்குழுவை 'கழகத்தின் 2-வது பொதுக்குழு' என பேரறிஞர் அண்ணா குறிப்பிடுகிறார். அந்தப் பொதுக்குழுவை விரிவான அளவில் நடத்தப்பட்ட முதல் பொதுக்குழுவாகக் கருதலாம். அந்தக் கூட்டம், காஞ்சிபுரத்தில் நடைபெற்றது.

# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் 30

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**



# பழங்குடிகளை வளைத்த பார்ப்பனியம்!

அருணாச்சலப் பிரதேசம், அஸ்ஸாம், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகலாந்து, திரிபுரா, சிக்கிம் ஆகிய எட்டு மாநிலங்கள் இந்தியாவின் வடகிழக்கு எல்லையோரத்தில் அமைந்திருப்பதால், அவற்றை வடகிழக்கு மாநிலங்கள் என்றழைக்கிறோம். இம்மாநிலங்கள் அனைத்திலும் பழங்குடி மக்கள் அதிகளவில் வாழ்கின்றனர். மேகாலயா, மிசோரம், நாகலாந்து, அருணாச்சலப் பிரதேசம் ஆகிய நான்கு மாநிலங்களில் பழங்குடியினருக்கு 80 சதவிகிதம் இடஒதுக்கீடு உள்ளது. அங்கே மற்ற வகுப்பினர் குறைந்த அளவில் வசிப்பதால், அவர்களுக்கு இடஒதுக்கீடு இல்லை. திரிபுராவிலும், அஸ்ஸாமிலும் SC, ST, OBC, EWS ஆகிய நான்கு வகை இடஒதுக்கீடுகள் செயலில் உள்ளன.

மக்கள்தொகை அடிப்படையில், அஸ்ஸாம் மிகப்பெரிய வடகிழக்கு மாநிலமாக அமைந்துள்ளது. ஏனைய இந்திய மாநிலங்களை ஒப்பிடுகையில், கலாச்சாரம், பண்பாடு, உணவுப் பழக்கம், மொழி, நிலவியல் உள்ளிட்ட பல்வேறு தளங்களில் வேறுபட்டுள்ள வடகிழக்குப் பகுதியில் உள்ள அஸ்ஸாமில் இடஒதுக்கீட்டுக் கோரிக்கைக்குத் தேவை இருந்ததா?

1824-இல் நடைபெற்ற முதல் ஆங்கிலேய - பர்மியப் போரில் அஸ்ஸாமைக் கைப்பற்றிய ஆங்கிலேயர்கள் அருகாமையிலிருந்த வங்காள மாகாணத்துடன் இணைத்தனர். அடுத்த நூறாண்டுகளில் நிர்வாக வசதிக்காக செயல்படுத்தப்பட்ட பல்வேறு மாற்றங்களுக்குப் பின்னர், 1912-இல் மொழி அடிப்படையில் 'அஸ்ஸாம் மாகாணம்' உருவாக்கப்பட்டது.

1931-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி அஸ்ஸாமின் மக்கள்தொகையில் இந்துக்கள் 56.3%, முஸ்லிம்கள் 27%, பழங்குடியினர் 10%, மீதமுள்ளவர்களில் கிறிஸ்துவர்கள், பவுத்தர்கள் உள்ளிட்டோரும் அடங்குவர். மக்கள்தொகை கணக்கெடுப்பை ஒட்டி, சமூக இயக்கங்களும் அரசியல் செயல்பாடுகளும் இயங்கியதால், ஒவ்வொரு மக்கள்தொகைக் கணக்கெடுப்பிலும் கிடைத்த எண்ணிக்கையில் வேறுபாடு இருந்தது. உதாரணமாக, 1921-இல் 54.6% இருந்த இந்துக்களின் விகிதம் 1931-இல் 56.3% ஆக உயர்ந்தது. பழங்குடி மக்களிடம் 'அஸ்ஸாம் இந்து சபா' செய்த பிரச்சாரத்தின் விளைவாக, கணிசமான பழங்குடியினர் தங்களை இந்துக்கள் என்று பதிவு செய்ததே உயர்வுக்குக் காரணம்.

1920-களில் இந்துக்களால் தீண்டப்படாத வர்களாகக் கருதப்பட்ட மக்களைக் குறிக்க தாழ்த்தப்பட்ட (Depressed) என்ற சொல் அதிகாரப்பூர்வமாகப் பயன்படுத்தப்பட்டது. இருப்பினும், ஆங்கில அரசு அஸ்ஸாமில் தாழ்த்தப்பட்டவர்கள் என்ற கருத்தாக்கத்தைப் பயன்படுத்தவில்லை. அதற்குப் பதிலாக இந்துக்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோரைக் குறிக்க, இந்து வெளிச்சாதிகள் (Hindu exterior castes), பிற்படுத்தப்பட்ட பழங்குடியினர் (INDIGENOUS BACKWARD TRIBES), தேயிலைத் தோட்டக் கூலி சாதிகள் (Tea garden cooly castes) ஆகிய மூன்று பிரிவுகள் பயன்படுத்தப் பட்டன.

'பார்த்தாலே தீட்டு' என்று கருதப்படும் கொடுமையான தீண்டாமை அஸ்ஸாமில் இல்லை என்பதால், தாழ்த்தப்பட்ட சாதியினர் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை, ஏனெனில், இங்கு அனைத்துச் சாதியைச் சேர்ந்தவர்கள், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சேர்ந்து பயின்றனர், அனைத்து சாதியினரும் பொதுக்கிணறு, குளங்களில் இருந்து தண்ணீர் எடுக்க முடிந்தது என்பது அஸ்ஸாமின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அதிகாரி C.S.முல்லனின் விளக்கம். இருப்பினும் சாதிய வேறுபாடுகளும், சமூகப் பொருளாதார, கல்வி நிலையில் ஏற்றத்தாழ்வுகளும் இருந்ததால், பிற்படுத்தப்பட்டவர்கள் மேலே குறிப்பிட்டது போல் மூன்று பிரிவினராக வகைப்படுத்தப் பட்டனர்.

''அஸ்ஸாமில் ஜாதி என்பது மற்ற இடங்களைப் போல செயல்பாட்டுப் பிரிவினை யாக அல்ல, இனப் பிரிவினையாக இருக்கிறது. பழங்குடி மக்கள் இந்துமத வரம்பிற்குள் முழுமையாக வரவில்லையென்பதால், இந்து மதம் பழங்குடி சமூகங்களைச் சகிப்புத்தன்மை யுடன் அணுகுகிறது. தம்மை ஒடுக்க நினைப்பவர்களை தடியால் அடித்து விரட்டு பவர்களை யாராலும் ஒடுக்க முடியாது"என்று அஸ்ஸாமில் ஜாதியின் நடைமுறை குறித்து, முல்லன் கூறிய விளக்கம், இன்றைய நிலையிலும் முக்கியமானது.

தாழ்த்தப்பட்ட சாதி (Depressed Caste) என்ற பெயரை, ஆங்கிலேய அரசு பயன்படுத்தா விட்டாலும், சில சாதியினர், குறிப்பாக சமூகரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில்

**இன்றும் அஸ்ஸாமில் பழங்குடியினர் இடஒதுக்கீடு, மலை, சமவெளி என்றே பிரித்தே தரப்படுகிறது.**

இருந்த சாதியினர் (பிரிட்டியல் பனியா, டோம்ஸ், ஹரிஸ், ஹிராஸ்), தங்களை தாழ்த்தப்பட்ட சாதி என்று வரையறுக்க வேண்டும் என்று கோரினர். சில சாதியினர் (நாமசூத்ரா, கைபத்ரா) சமூக ஏற்பு பெறுவதற்காக தங்கள் சாதிப்பெயரை மாற்ற முனைந்தனர். சில சாதியினர் (சூட், கடானிஸ், யோகி) தங்களை தாழ்த்தப்பட்ட சாதியாகக் கருதக் கூடாது என்று கோரினர். கோவில்களுக்குள் அனுமதிக்கப்படாத சில சாதியினர் உயர்ஜாதி அந்தஸ்து கோரி பூணூல் அணியத் தொடங்கினர். சில சாதியினர் (நாத்ஸ்) விதவை மறுமணத்தைக் கைவிடுதல், பிற சாதியினர் தயாரிக்கும் உணவை உண்ணாமலிருத்தல் போன்ற செயல்களைச் செய்வதின் மூலம் சமூக நிலையை உயர்த்த முயன்றனர். இந்த முயற்சிகளால் எந்தவிதமான பலன்களும் ஏற்படவில்லை.

எவ்வாறாயினும், ஏனைய மாகாணங்களைப் போன்றே அஸ்ஸாமிலும் 'பிராமணர்', 'காயஸ்தா', 'காளிடாஸ்' உள்ளிட்ட உயர்சாதி யினர் கல்வி, சமூகப் பொருளாதார நிலையில் மேம்பட்டு இருந்தனர். அதே வேளையில் 'கைபத்ரா', 'பிரிட்டியல்', 'பனியா', 'நாமசூத்ரா', 'ஹிரா', 'மாலி', 'சூத்ரதர்' உள்ளிட்ட சாதியினர் சமூகக் களங்கத்திற்கு ஆளாயினர். அனைத்து இழிவு வேலைகளில் இருந்தும் உயர்சாதி இந்துக்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டு, தாழ்த்தப்பட்ட மக்கள் மீது திணிக்கப்பட்டதால், உயர்சாதி இந்துக்கள் சமூக அந்தஸ்து, கல்வி, பொருளாதார வாய்ப்புகளைக் கூடுதலாக அனுபவித்தனர்.

உதாரணமாக, 1931-இல் 1000 பேரில் 594 பிராமண ஆண்களும், 159 பிராமண பெண்களும் கல்வியறிவுப் பெற்றிருந்தனர். ஆனால், ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த ஆண்கள் 135 பேரும், பெண்கள் 4 பேர் மட்டுமே கல்வியறிவு பெற்றுள்ளனர். வேறு சொற்களில் கூறுவதானால், ஒடுக்கப்பட்ட ஆண்களை விட, பிராமண ஆண்களின் எழுத்தறிவு பத்து மடங்கு அதிகம். அதேபோல் பிராமண பெண்களின் கல்வியறிவு விகிதம், ஒடுக்கப்பட்ட பெண்களை விட 40 மடங்கு அதிகம்.

இவ்வகையான ஏற்றத்தாழ்வுகளை மாற்ற விரும்பிய பிரிட்டியல் பனியா சாதியில் பிறந்த சோனாதர் சேனாபதி ஒடுக்கப்பட்ட சாதிகள், பழங்குடியினரின் பிரச்சினைகளை, ஆங்கிலேய ஆட்சியாளர்களிடம் எடுத்துச் சென்றார். சமூக நீதிக்காக சோனாதர் சேனாபதியின் ஒருங்கிணைப்பில் இயங்கிய அனைத்து அஸ்ஸாம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சங்கம் (All Assam Depressed Classes Association) இரட்டை வாக்குடன் கூடிய தனித்தொகுதிகளை ஆதரித்தது.


அரசியல் பிரதிநிதித்துவம் பெற்று, அதன்மூலம் சமூகப் பொருளாதார, பண்பாட்டு தளங்களில் முன்னேற்றத்தைச் சாதிக்க இயலும் என்று கருதிய அஸ்ஸாம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சங்கம், அதற்கான முயற்சிகளை எடுத்தது. அதன்விளைவாக, அஸ்ஸாமின் 14 ஒடுக்கப்பட்ட சாதிகள் 1935-இல் பட்டியல் சாதிகளாக ஏற்கப்பட்டு, இடஒதுக்கீடு பெறத் தொடங்கின. 1935-ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டத்தின் படி அஸ்ஸாம் சட்டப்பேரவையில் பட்டியல் சாதிகளுக்கு 7 இடங்களும் முஸ்லிம்களுக்கு 34 இடங்களும் ஒதுக்கப்பட்டன. மலையில் வாழ்வோர், சமவெளிப் பகுதியில் வாழ்வோர் என இரண்டாகப் பிரிக்கப்பட்ட பழங்குடியினருக்கு மொத்தம் 9 இடங்கள் ஒதுக்கப்பட்டன. இன்றும் அஸ்ஸாமில் பழங்குடியினர் இடஒதுக்கீடு, மலை, சமவெளி என்றே பிரித்தே தரப்படுகிறது.

...குரல் ஒலிக்கும்

## திராவிடத்தால் வாழ்கிறோம்

611

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131